**மாநில திட்ட இயக்ககம், சென்னை-06**

**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி**

| **அனுப்புநர்** | **பெறுநர்** |
|---|---|
| மாநில திட்ட இயக்குநர்,<br>ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,<br>பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,<br>சென்னை – 06. | முதன்மைக் கல்வி அலுவலர்,<br>அனைத்து மாவட்டங்கள். |

**ந.க.எண்.1680/A11/ஒபக/பமேகு/2023, நாள்.19.07.2023**

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – உண்டு, உறைவிடப் பள்ளிகள் மற்றும் நிலுவையில் உள்ள அனைத்து வகை அரசு பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு செய்தல் - வழிகாட்டுதல்கள் வழங்குதல் - சார்பு.

பார்வை: இவ்வியக்கக செயல்முறைகள் ந.க.எண். 449/C7/ஒபக/பமேகு/2021, நாள்16.03.2022, 31.03.2022 மற்றும் 06.04.2022.

*******

**நிலுவையில் உள்ள அனைத்து வகை அரசுப் பள்ளிகளுக்கான பள்ளி மேலாண்மைக் குழுக்களுக்கான மறுகட்டமைப்பு நாள்: 19.08.2023**

பள்ளியின் முன்னேற்றத்திற்காகவும், பள்ளி வளர்ச்சிக்குத் துணை நிற்கவும் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்-2009-இன்படி பள்ளி மேலாண்மைக் குழு உருவாக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், பார்வையில் காணும் செயல்முறைகளின்படி, அரசு பள்ளிகளில் ஏப்ரல்–ஜுலை-2022 மாதங்களில் பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு செய்யப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. தற்போது பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு செய்யப்படாமல் உள்ள அனைத்து வகை அரசுப் பள்ளிகளிலும் பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு செய்யப்படுதல் அவசியமான ஒன்றாகும்.

பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் பெண் கல்வியை ஊக்குவிக்கவும் KGBV உண்டு உறைவிட பள்ளிகள் தொடங்கப்பட்டன. KGBV உண்டு உறைவிட பள்ளிகள் மாவட்ட ஆட்சியரால் தெரிவு செய்யப்படும் அரசு சாரா அமைப்பினரால் நிர்வகிக்கப்படுகின்றன. மேலும், ஆசிரியர் பணியிடங்களும் அரசு சாரா அமைப்பினால் நிரப்பப்படுகின்றன. எனவே, அங்கு கல்வி கற்கும் மாணவிகளின் கல்வி தரத்தை உறுதி செய்யவும் கல்வி வளர்ச்சியில் பெற்றோர்கள், சமுதாயத்தினருடைய பங்கேற்பை உறுதி செய்வதற்காகவும் KGBV உண்டு உறைவிட பள்ளிகளிலும் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் மறுகட்டமைப்பு செய்யப்பட வேண்டும். அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு பள்ளிக் கல்வித் துறை மூலம் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து நலத்திட்டங்களும், KGBV உண்டு உறைவிட பள்ளிகளில் கல்வி கற்கும் மாணவிகளும் பயன்பெறவும், அத்திட்டங்களை சமுதாயத்தின் பங்களிப்போடு சிறப்பாக நடைமுறைப்படுத்தி கண்காணிக்கவும் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் அவசியமாகிறது.

**மாவட்டங்களிலுள்ள உண்டு உறைவிட பள்ளிகள் (NSCBAV) / KGBV உண்டு உறைவிட பள்ளிகள் / பழங்குடியினர் நலத் துறை பள்ளிகள் (Tribal Welfare Department) / வனத் துறை பள்ளிகள் (Forest Department) மற்றும் பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு செய்யப்படாமல் உள்ள அனைத்து வகை அரசுப் பள்ளிகளிலும் 19.08.2023 அன்று பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு செய்யப்படுதல் வேண்டும்**

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்-2009-இன் படி இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பள்ளி மேலாண்மைக் குழுக்களை மறுகட்டமைப்பு செய்வது அவசியமாகிறது. பள்ளி மேலாண்மைக் குழுக்களுக்குப் பெற்றோர்களில் இருந்து 15 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதில் ஒளிவு மறைவற்ற முறை பின்பற்றப்பட வேண்டும். பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளின் பெற்றோர்களே தங்களின் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க வேண்டும். பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் சிறப்பாக செயல்பட வேண்டுமென்றால் அவர்கள் உள்ளார்ந்த விருப்பத்துடனும், பள்ளி வளர்ச்சிக்கான செயல்பாடுகளில் ஈடுபாடும் கொண்டு நேரம் ஒதுக்குவது மிகவும் அவசியமாகும்.

## அரசாணை எண்.42, நாள்.06.03.2019-இன் படி பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர் விவரம்

| வ. எண் | வகை | எண்ணிக்கை | பதவி | முன்னுரிமை |
|---|---|---|---|---|
| 1 | பெற்றோர் | 1 | தலைவர் | பெண் |
| 2 | பள்ளியில் பயிலும் **மாற்றுத்திறனாளி மாணவர்களின் பெற்றோர்** / பள்ளியில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்களாக உள்ள **தூய்மை பணியாளர்கள்** / **எய்ட்ஸ் நோயாளிகள்** / **திருநங்கைகள்** அல்லது SC/ST **வகுப்பைச் சார்ந்த குழந்தையின் பெற்றோர்.** | 1 | துணைத் தலைவர் | |
| 3 | தலைமையாசிரியர் | 1 | உறுப்பினர் மற்றும் கூட்ட அழைப்பாளர் (Member-Convenor) | பெண்-1 |
| 4 | ஆசிரியர் பிரதிநிதி | 1 | உறுப்பினர் | |
| 5 | பெற்றோர் பிரதிநிதிகள் (SC, ST, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினர் உட்பட) | 12 | உறுப்பினர் | பெண்கள்-7 |
| 6 | உள்ளாட்சிப் பிரதிநிதிகள் | 2 | உறுப்பினர் | பெண் –1 |
| 7 | கல்வி ஆர்வலர் / அரசு சாரா அமைப்பினர் / ஓய்வு பெற்ற ஆசிரியர் | 1 | உறுப்பினர் | |
| 8 | சுய உதவிக் குழு உறுப்பினர் (பெற்றோர்) | 1 | உறுப்பினர் | பெண்-1 |
| | **மொத்த உறுப்பினர்கள்** | **20**** | | |

****மொத்த உறுப்பினர்களில் 75%, அதாவது 15 உறுப்பினர்கள் பெற்றோர்களாக இருக்க வேண்டும். அவர்களுள் குறைந்த பட்சம் 10 பெண் உறுப்பினர்கள் கட்டாயமாக இடம் பெற்றிருக்க வேண்டும்.**

**பள்ளியில் மாணவர் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தால், பள்ளி மேலாண்மைக் குழுவில் பெற்றோர்களின் எண்ணிக்கையை சூழலுக்கேற்ப மாற்றி அமைத்துக்கொள்ளலாம். ஆனால், அந்தந்தப் பதவிக்கு உரியவர்களைத் தவிர வேறு எவரையும் தெரிவு செய்தல் கூடாது.**

1. **பெற்றோர் உறுப்பினர்கள்(15):**

   அப்பள்ளியில் பயிலாத மாணவர்களின் பெற்றோர்கள் பள்ளி மேலாண்மைக் குழுவில் பெற்றோர் உறுப்பினராக இடம்பெற இயலாது. பெற்றோர்களின் பிரதிநிதித்துவம் அனைத்து சமுதாய மக்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

   பள்ளியில் மாற்றுத் திறனாளி குழந்தைகள் இருப்பின், 15 பெற்றோர் உறுப்பினர்களில் அவசியம் 1 மாற்றுத் திறனாளி குழந்தையின் பெற்றோர் துணைத் தலைவாராகவோ அல்லது குறைந்தபட்சம் உறுப்பினராகவோ இருப்பதை கட்டாயம் கடைபிடிக்க வேண்டும்.

2. **ஆசிரியர் பிரதிநிதி:**

   ஆசிரியர் பிரதிநிதி அரசாணை எண். 213 நாள். 26.12.2011-இன்படி அந்தப் பள்ளியிலுள்ள ஆசிரியர்களால் தீர்மானிக்கப்பட வேண்டும்.

3. **உள்ளாட்சி பிரதிநிதிகள்:**

   i. உள்ளாட்சி பிரதிநிதி என்பவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகராட்சி / நகராட்சி / பேரூராட்சி / ஊராட்சி மன்ற உறுப்பினர் ஆவர்.

   ii. அந்தந்த உள்ளாட்சி பகுதிகளில் அமைந்துள்ள பிற பள்ளிகளில் உறுப்பினர்களாக இடம்பெறாத உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். சார்ந்த பள்ளிகளுக்கான தெரிவை அரசாணை எண்.213 நாள் 26.12.2011-இன்படி உள்ளாட்சி மன்றம் தீர்மானிக்கும்.

   iii. நகர்ப்புறங்களில் உள்ள உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகளின் வார்டு எல்லைக்குள் ஒன்றுக்கும் மேற்பட்ட பள்ளிகள் இருந்தால், அந்தப் பிரதிநிதி அவரின் வார்டு எல்லைக்குள் அமைந்துள்ள ஒன்றுக்கும் மேற்பட்ட பள்ளிகளின் பள்ளி மேலாண்மைக் குழுக்களில் இருக்க அனுமதிக்க வேண்டும்.

4. <u>**கல்வி ஆர்வலர் / அரசு சாரா அமைப்பினர் / ஓய்வு பெற்ற அசிரியர்**</u>:

i. கல்வி ஆர்வலர் / அரசு சாரா அமைப்பினர் / ஓய்வு பெற்ற ஆசிரியர் என்பவர் கற்றலை மேம்படுத்துபவராகவும், மாணவர்களின் நலனில் அதீத அக்கறை கொண்டவராகவும் இருக்க வேண்டும்.

ii. பள்ளிகளில் இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர்கள் இருக்கும் பட்சத்தில், அவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். ஒன்றுக்கும் மேற்பட்ட இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர்கள் உறுப்பினராக செயல்பட விருப்பம் தெரிவிக்கும் பட்சத்தில், பெரும்பான்மையான பெற்றோர்கள் தேர்வு செய்யும் தன்னார்வலர் உறுப்பினராக வேண்டும்.

iii. உண்டு உறைவிட பள்ளிகள் (NSCBAV) / KGBV உண்டு உறைவிட பள்ளிகளை வழிநடத்தும் அரசு சாரா அமைப்பினர் நீங்கலாக பிற அரசு சாரா அமைப்பினரை அப்பள்ளிகளில் தெரிவு செய்ய வேண்டும்.

iv. கல்வி ஆர்வலர், **அரசு சாரா அமைப்பினர், ஓய்வு பெற்ற ஆசிரியர் இவர்களில் ஒருவர் மட்டுமே பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினராக இருக்க வேண்டும்.**

5. <u>**உறுப்பினர் மற்றும் கூட்ட அழைப்பாளர் (Member -Convenor):**</u>

i. பள்ளியின் தலைமையாசிரியர் பள்ளி மேலாண்மைக் குழுவில் பதவிவழி உறுப்பினராக இடம்பெறுவார். மேலும், தலைமையாசிரியர் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டங்களைக் கூட்டும் கூட்ட அழைப்பாளராக (**Convenor**) செயல்பட வேண்டும்.

ii. தலைமையாசிரியர் இல்லாத நேர்வுகளில் பதவியில் மூத்த ஆசிரியர் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டங்களைக் கூட்டும் கூட்ட அழைப்பாளராக (**Convenor**) செயல்பட வேண்டும்.

iii. உண்டு உறைவிட பள்ளிகள் (NSCBAV) / KGBV உண்டு உறைவிட பள்ளிகளில் விடுதிகாப்பாளர் / தலைமை ஆசிரியர் (Warden cum HM) உறுப்பினர் மற்றும் கூட்ட அழைப்பாளராக (**Member - Convenor**) செயல்பட வேண்டும்.

iv. உண்டு உறைவிட பள்ளிகள் (NSCBAV) / KGBV உண்டு உறைவிட பள்ளிகளைச் சார்ந்த வட்டார வளமைய மேற்பார்வையாளர் / வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநர் கூட்ட அழைப்பாளரின் பொறுப்புகளை உறுதி செய்தல் வேண்டும்.

6. **சுய உதவிக் குழு உறுப்பினர் (பெற்றோர்):**

i. சுய உதவிக் குழுக்களில் இடம்பெற்றுள்ள, பள்ளியில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்களில் ஒருவர் பள்ளி மேலாண்மைக் குழுவின் உறுப்பினராக தேர்வு செய்யப்படுவார். சுய உதவிக் குழுவின் ஊக்குநர் தலைவர் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு (Panchayat Level Federation) முன்னுரிமை அளிக்கலாம்.

ii. சுய உதவிக் குழுக்களில் இடம்பெற்றுள்ள, பள்ளியில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்களில் ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் பள்ளி மேலாண்மைக் குழுவின் உறுப்பினராக விருப்பம் தெரிவிக்கும் நேர்வுகளில் பெரும்பான்மை பெற்றோரின் விருப்பப்படி தேர்வு செய்யப்படுவார்.

**பெற்றோர்களுக்கு மறு கட்டமைப்பு குறித்து தகவல் தெரிவித்தல்:**

i. பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு தொடர்பான அழைப்புக் கடிதத்தைத் தயார் செய்து பெற்றோர்களுக்கு அனுப்ப வேண்டும் அல்லது ஆசிரியர்கள் தங்கள் வகுப்பில் பயிலும் மாணவர்களின் நோட்டுப் புத்தகத்தில் அதற்கான அழைப்புக் கடிதத்தை எழுதி அனுப்ப வேண்டும். பெற்றோர்களின் கையொப்பம் அழைப்புக் கடிதத்தில் பெற்று அவர்களின் பங்களிப்பை உறுதி செய்ய வேண்டும்.

ii. பெற்றோருக்கான அழைப்பிதழ் தொடர்பான துண்டுப்பிரசுரங்கள் பள்ளியில் படிக்கின்ற குழந்தைகள் மூலம் கொடுத்து அனுப்பலாம்.

iii. வாட்ஸ்அப் செய்திகள் மூலம் பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு நடைபெறுவது குறித்து பெற்றோர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

இத்தகைய செயல்பாடுகளின் மூலம் பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பிற்கு பெற்றோர்களின் வருகை மற்றும் பங்களிப்பை உறுதி செய்ய வேண்டும்.

**பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்தல்:**

பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களை தெரிவு செய்யும் நடைமுறையை பதவி வழி தலைமையேற்று நடத்தும் அலுவலராக பள்ளியின் தலைமையாசிரியர் செயல்படுவார் .உண்டு உறைவிட பள்ளிகள் (NSCBAV) / KGBV உண்டு உறைவிட பள்ளிகளில் சார்ந்த வட்டார வளமைய

மேற்பார்வையாளர் / வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநர் மறுகட்டமைப்பு நிகழ்வன்று தலைமையாசிரியருக்கு உறுதுணையாக இருந்து வழிகாட்டுதல் வேண்டும்.

மாவட்ட ஆட்சியர் அவர்களால் நியமிக்கப்படும் அரசு அலுவலர் ஒருவர் இந்நிகழ்வில் பார்வையாளராக கலந்துகொண்டு தலைமையாசிரியருக்கு தக்க உதவிகளைச் செய்ய வேண்டும்.

<u>**மறுகட்டமைப்பு செய்யும் வழிமுறைகள்**</u>:

i. மாணவர்களின் பெயர், பயிலும் வகுப்பு மற்றும் அவர்களின் பெற்றோரின் பெயர், முகவரி அடங்கிய பட்டியலை மறுகட்டமைப்பு நடைபெறும் ஏழு நாட்களுக்கு முன்பாக தயார் செய்து வைத்துக் கொள்ள வேண்டும். **இத்தகவல்களை கல்வி மேலாண்மைத் தகவல் முறைமையிலிருந்து (EMIS) பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். (படிவம் – 1)**

ii. மறுகட்டமைப்பு நடைபெறும் நாளில், குறிப்பிட்ட நேரத்தில் அனைத்துப் பெற்றோர்களும் வரவழைக்கப்பட்டு, பள்ளி வளாகத்தில் போதிய இடவசதியுள்ள அறை அல்லது திறந்த வெளியில் அமர வைக்கப்பட வேண்டும். அதிக எண்ணிக்கையில் பெற்றோர்கள் கூட்டத்தில் கலந்துகொள்வதை உறுதி செய்ய வேண்டும்.

iii. ஒரு மாணவரின் தாய் மற்றும் தந்தை இருவரும் மறுகட்டமைப்பு நாளில் பள்ளிக்கு வருகை புரியும் நேர்வில் அவர்களில் யாராவது ஒருவர் மட்டுமே தெரிவு செய்யும் நிகழ்வில் பங்கேற்க வேண்டும்.

iv. இடவசதி குறைவாக இருந்தால், தேவை ஏற்படின் 1-5 வகுப்பு மாணவர்களின் பெற்றோர்களை தனியாகவும் 6-8 வகுப்புகள், 9-10 வகுப்புகள் மற்றும் 11 வகுப்பு பயிலக் கூடிய மாணவர்களின் பெற்றோர்களைத் தனித்தனியாக அமரச்செய்து அவர்களுக்குரிய உறுப்பினர்களைத் தெரிவு செய்ய வேண்டும்.

v. அனைத்து வகுப்புகளில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய கீழ்கண்ட வழிமுறையைப் பின்பற்ற வேண்டும்.

**<u>தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் விகிதாச்சார பிரதிநிதித்துவம்</u>** (Proportional Representation):

பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய 15 பெற்றோர் உறுப்பினர்களில் கீழ்க்கண்ட விகிதாரச்சார பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும்.

| வ. எண் | பள்ளி | மாணவர்கள் பயிலும் வகுப்பு அடிப்படையில் தெரிவு செய்யப்பட வேண்டிய பெற்றோர்கள் | | சுய உதவிக் குழு பெற்றோர் உறுப்பினர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | வகுப்பு | உறுப்பினர் எண்ணிக்கை** | | |
| 1 | அரசு தொடக்கப் பள்ளி | | | | |
| | 1 முதல் 5 வகுப்புகள் உள்ள பள்ளி | 1-4 | 14 | 1 | 15 |
| 2 | அரசு நடுநிலைப் பள்ளி | | | | |
| | 1 முதல் 8 வகுப்புகள் உள்ள பள்ளி | 1-5 | 10 | 1 | 15 |
| | | 6-7 | 4 | | |
| 3 | அரசு உயர்நிலைப் பள்ளி | | | | |
| | 1 முதல் 10 வகுப்புகள் உள்ள பள்ளி | 1-5 | 8 | 1 | 15 |
| | | 6-8 | 4 | | |
| | | 9 | 2 | | |
| | 6 முதல் 10 வகுப்புகள் உள்ள பள்ளி | 6-8 | 10 | 1 | 15 |
| | | 9 | 4 | | |
| 4 | அரசு மேல்நிலைப் பள்ளி | | | | |
| | 1 முதல் 12 வகுப்புகள் உள்ள பள்ளி | 1-5 | 5 | 1 | 15 |
| | | 6-8 | 4 | | |
| | | 9-10 | 3 | | |
| | | 11 | 2 | | |
| | 6 முதல் 12 வகுப்புகள் உள்ள பள்ளி | 6-8 | 7 | 1 | 15 |
| | | 9-10 | 5 | | |
| | | 11 | 2 | | |

****மேற்கண்ட அட்டவணையில் உள்ள உறுப்பினர்களில் பெண் உறுப்பினர் எண்ணிக்கை குறைந்த பட்சம் 7 ஆக இருக்க முன்னுரிமை அளிக்க வேண்டும்.**

****மாற்றுத்திறனாளி குழந்தைகளின் பெற்றோர் ஒருவராவது துணைத் தலைவராகவோ அல்லது குறைந்த பட்சம் உறுப்பினாராகவோ கட்டாயம் இடம்பெறுவதை உறுதி செய்துக்கொள்ள வேண்டும்.**

மாற்றுத்திறனாளி குழந்தைகளின் பெற்றோர் யாரும் இல்லையெனில் பள்ளியில் பயிலும் மாணவர்களின் பெற்றோராக உள்ள தூய்மை பணியாளர்கள் / எய்ட்ஸ் நோயாளிகள் / திருநங்கைகளில் ஒருவர் தெரிவு செய்யப்பட வேண்டும்.

பள்ளிகளில் ஏதேனும் வகுப்புகளின் பிரிவுகளில் (1 முதல் 5 வரை, 6 முதல் 8 வரை, 9 முதல் 10 வரை மற்றும் 11) மாணவர்கள் எண்ணிக்கை அல்லது மறுகட்டமைப்பு நாளன்று வருகை தரும் பெற்றோர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தால் அந்தப் பிரிவில் பெற்றோர்களின் பிரநிதித்துவத்தை குறைத்துக்கொண்டு எந்த பிரிவில் மாணவர்கள் எண்ணிக்கை அல்லது மறுகட்டமைப்பு நாளன்று பெற்றோர்களின் வருகை அதிகமாக இருக்கிறதோ அந்தப் பிரிவில் பெற்றோர்களின் பிரநிதித்துவத்தை அதிகரித்துக் கொள்ளலாம். இதனை அந்தந்த பள்ளியின் சூழ்நிலைக்கு ஏற்ப முடிவு செய்துகொள்ள வேண்டும்.

பள்ளியில் பயிலும் மாணவர்களின் குடியிருப்புகள் அனைத்திற்கும் பிரதிநிதித்துவம் கிடைப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

<u>தெரிவு செய்யும் வழிமுறை</u>:

i. தலைமையாசிரியரே உறுப்பினர்களை தெரிவு செய்யும் அலுவலராக இருப்பார் என்பதை கூட்டத்தின் தொடக்கத்தில் பெற்றோருக்கு தெரியப் படுத்துதல் வேண்டும்.
ii. ஆசிரியர் ஒருவர் ஒவ்வொரு பதவி, உறுப்பினருக்கான விளக்கம் மற்றும் கடமைகள் குறித்துத் தெளிவாகவும், சுருக்கமாகவும் பெற்றோர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும்.
iii. விகிதாச்சார பிரிநிதித்துவ அடிப்படையில் மேற்காணும் அட்டவணையில் உள்ள படி பெற்றோர் உறுப்பினர்களைத் தெரிவு செய்ய வேண்டும்.

iv. பதவி வழி உறுப்பினர் தவிர மற்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட விரும்பும் நபரை பெற்றோர்களில் யாராவது ஒருவர் முன்மொழிய வேண்டும். அதை மற்றொருவர் வழிமொழிய வேண்டும்.

v. ஒருவேளை யாரும் முன்மொழியப்படவில்லையென்றால், யாரெல்லாம் உறுப்பினராக விரும்புகிறீர்கள் என்று தெரிவு செய்யும் அலுவலர் கேட்க வேண்டும்.

vi. யாரெல்லாம் உறுப்பினராக விரும்புகிறார்களோ அவர்களை மேடைக்கு அழைத்து அவர்களை பெற்றோர்கள் முன்னிலையில் ஒவ்வொருவராக அறிமுகப்படுத்தி இவரை உறுப்பினராக தேர்ந்தெடுக்க நீங்கள் அனைவரும் சம்மதிக்கிறீர்களா? என்று கேட்டு, சம்மதத்தை பெற வேண்டும். இதற்கு கையை உயர்த்தி சம்மதம் தெரிவிக்கும் முறையைப் பின்பற்ற வேண்டும்.

vii. சம்மதம் தெரிவிக்கும் பெற்றோரின் எண்ணிக்கையை ஒவ்வொரு போட்டியாளருக்கும் தனித்தனியாகக் கணக்கிட்டு இதற்கான படிவத்தில் குறித்துக் கொள்ள வேண்டும். (**படிவம் -2**)

viii. அதிக எண்ணிக்கையில் பெற்றோர்கள் ஆதரவை பெறும் நபரை தேர்ந்தெடுக்கப்பட்டவராக அறிவிக்க வேண்டும்.

ix. சமமான எண்ணிக்கையில் பெற்றோர்களின் ஆதரவு இருக்குமானால், சமமான எண்ணிக்கையில் ஆதரவுப் பெற்ற நபர்களின் பெயர்களைக் காகிதத் துண்டில் எழுதி அட்டைப் பெட்டியில் போட்டுக் குலுக்கல் முறையில் ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டும்.

1. <u>பதவி வழி உறுப்பினர் தேர்வு :</u>

   i. **உள்ளாட்சி பிரதிநிதி உறுப்பினர்கள்** – பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு நடைபெறும் மூன்று நாட்களுக்கு முன்பாக உள்ளாட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி உரிய பிரதிநிதிகளின் விவரத்தை தொடர்புடைய பள்ளித் தலைமையாசிரியருக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்த வேண்டும்.

   ii. **ஆசிரியர் உறுப்பினர்** - ஆசிரியர்களின் ஒருமித்த கருத்துடன் ஆசிரியர் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

2. <u>தலைவர் தேர்வு</u>:

பள்ளி மேலாண்மைக் குழு பெற்றோர் உறுப்பினர்களில் ஒருவர், குழு உறுப்பினர்களால் பள்ளி மேலாண்மைக் குழு தலைவராக தேர்வு செய்யப்படுவார். இத்தேர்வில் பெண் உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

i. ஒன்றுக்கும் மேற்பட்ட பெண் உறுப்பினர்கள் பள்ளி மேலாண்மைக் குழு தலைவராக விருப்பம் தெரிவித்தால், பெரும்பான்மை உறுப்பினர்கள் தேர்வு செய்பவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.
ii. பள்ளி மேலாண்மைக் குழு தலைவராகப் பெண் மற்றும் ஆண் உறுப்பினர்கள் விருப்பம் தெரிவிக்கும் நேர்வுகளில் முன்னுரிமை அடிப்படையில் விருப்பம் தெரிவிக்கும் பெண் உறுப்பினர்களில் ஒருவரே பெரும்பான்மை உறுப்பினர்களால் தலைவராக தெரிவு செய்யப்பட வேண்டும்.
iii. பள்ளி மேலாண்மைக் குழு தலைவராகப் பெண் உறுப்பினர்கள் யாரும் விருப்பம் தெரிவிக்கவில்லை எனில், விருப்பம் தெரிவிக்கும் ஆண் உறுப்பினர்களில் ஒருவர் பெரும்பான்மை உறுப்பினர்களால் தலைவராக தேர்வு செய்யப்பட வேண்டும்.
iv. மேற்கண்ட தகுதி வாய்ந்த உறுப்பினர்களில் தலைவராகத் தேர்வு செய்யப்பட ஒரு உறுப்பினர் முன்மொழிய வேண்டும், மற்றொரு உறுப்பினர் வழிமொழிய வேண்டும்.
v. பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு நடைபெறும் நாளிலேயே தலைவர் தெரிவு செய்யப்பட வேண்டும்.
vi. ஒன்றுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் தலைவராக விருப்பம் தெரிவிக்கும் நேர்வுகளில் உறுப்பினர்களின் ஆதரவை தெரிந்துக்கொள்ள அவர்களின் கையை உயர்த்தி சம்மதம் தெரிவிக்கும் முறையைப் பின்பற்ற வேண்டும்.
vii. சம்மதம் தெரிவிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஒவ்வொரு போட்டியாளருக்கும் தனித்தனியாகக் கணக்கிட்டு இதற்கான படிவத்தில் குறித்துக் கொள்ள வேண்டும். (**படிவம் -3**)
viii. அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்கள் ஆதரவை பெறும் நபரை தேர்ந்தெடுக்கப்பட்டவராக அறிவிக்க வேண்டும்.
ix. சமமான எண்ணிக்கையில் உறுப்பினர்களின் ஆதரவு இருக்குமானால், அவர்களின் பெயர்களைக் காகிதத் துண்டில் எழுதி

அட்டைப் பெட்டியில் போட்டுக் குலுக்கல் முறையில் ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டும்.

x. தலைவர் தெரிவுக்கான முன் மொழிதல், வழி மொழிதல் மற்றும் பெற்ற ஆதரவு விவரங்களை இதற்கான படிவத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும். இந்த படிவத்தில் உறுப்பினர்கள் அனைவரின்கையொப்பம் பெறவேண்டும்.

<u>**துணைத்தலைவர்**</u>:

i. **பள்ளியில் பயிலும் மாற்றுத்திறனாளி மாணவர்களின் பெற்றோர்**, பள்ளியில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்களாக உள்ள **தூய்மை பணியாளர்கள், எய்ட்ஸ் நோயாளிகள் மற்றும் திருநங்கைகள்** அல்லது SC/ST **வகுப்பைச் சார்ந்த குழந்தையின் பெற்றோர்** பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களால் **துணைத்தலைவராக தேர்வு செய்யப்படுவார்**. மேற்காண் வழிகாட்டுதலில் மாறுதல் இல்லாமல் குறுப்பிட்டுள்ள பிரிவினர்/வகுப்பை சார்ந்த பெற்றோர் உறுப்பினரில் ஒருவர் துணைத் தலைவாராக தேர்வு செய்யப்படுவதை பள்ளியின் தலைமையாசிரியர் கட்டாயம் உறுதி செய்ய வேண்டும்.

ii. ஒன்றுக்கும் மேற்பட்ட தகுதியான உறுப்பினர்கள் துணைத்தலைவராக விருப்பம் தெரிவிக்கும் நேர்வுகளில் பெரும்பான்மை உறுப்பினர்களால் துணைத்தலைவர் தேர்வு செய்யப்பட வேண்டும்.

iii. மேற்கண்ட தகுதி வாய்ந்த உறுப்பினர்களில் துணைத்தலைவராக ஒருவர் தெரிவு செய்யப்பட ஒரு உறுப்பினர் முன்மொழிய வேண்டும், மற்றொரு உறுப்பினர் வழிமொழிய வேண்டும்.

iv. பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு நடைபெறும் நாளிலேயே துணைத்தலைவர் தெரிவு செய்யப்பட வேண்டும்.

v. ஒன்றுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் துணைத்தலைவராக விருப்பம் தெரிவிக்கும் **நேர்வுகளில்** உறுப்பினர்களின் ஆதரவை தெரிந்துக்கொள்ள அவர்களின் கையை உயர்த்தி சம்மதம் தெரிவிக்கும் முறையைப் பின்பற்ற வேண்டும்.

vi. சம்மதம் தெரிவிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஒவ்வொரு போட்டியாளருக்கும் தனித்தனியாகக் கணக்கிட்டு இதற்கான படிவத்தில் குறித்துக் கொள்ள வேண்டும். (**படிவம் -4**)

vii. அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்களின் ஆதரவைப் பெறும் நபரை தேர்ந்தெடுக்கப்பட்டவராக அறிவிக்க வேண்டும்.

viii. சமமான எண்ணிக்கையில் உறுப்பினர்களின் ஆதரவு இருக்குமானால், அவர்களின் பெயர்களைக் காகிதத் துண்டில் எழுதி அட்டைப் பெட்டியில் போட்டுக் குலுக்கல் முறையில் ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டும்.

ix. துணைத் தலைவர் தெரிவுக்கான முன் மொழிதல், வழி மொழிதல் மற்றும் பெற்ற ஆதரவு விவரங்களை இதற்கான படிவத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும். இந்த படிவத்தில் உறுப்பினர்கள் அனைவரின்கையொப்பம் பெறவேண்டும்.

<u>முக்கிய குறிப்புகள்</u>:

i. அனைவரையும் கண்ணியத்தோடு நடத்துவதை தலைமையாசிரியர் உறுதி செய்ய வேண்டும்.

ii. பள்ளி மேலாண்மைக் குழுவின் தலைவர் மற்றும் துணைத் தலைவர் தெரிவுச் செய்யப்பட்ட பிறகு தலைவர் மற்றும் துணைத் தலைவர் இருவரும் பெற்றோர்களுடன் பள்ளி வளர்ச்சி குறித்து பேசுதல் வேண்டும்.

iii. இதனைத் தொடர்ந்து, பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டம் ஒவ்வொரு மாதமும் இறுதி வெள்ளிக்கிழமை அன்று நடைபெறும் என்பதனையும் ஜனவரி மாதத்திற்கான கூட்ட நாளன்றே பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி நடைபெறும் என்ற விவரத்தினையும் உறுப்பினர்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

iv. இறுதியாக, உறுப்பினர்கள் அனைவரும் கூட்டப் பதிவேட்டில் கையெழுத்திட வேண்டும்.

v. அனைத்து உறுப்பினர்களின் கைபேசி எண் மற்றும் முகவரியைத் தவறாமல் பதிவேட்டில் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

vi. தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியலை அவர்களின் பொறுப்பு விவரங்களுடன் பள்ளியின் அறிவிப்பு பலகையில் அனைவரும் பார்க்கும்படியான இடத்தில் ஒட்ட வேண்டும்.

vii. தேர்ந்தெடுக்கப்பட்ட இருபது உறுப்பினர்களும் ஒரு குழுவாகப் புகைப்படம் எடுத்துக்கொள்வது சிறப்பாக இருக்கும்.

viii. தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பட்டியல் மற்றும் அவர்களது குழு புகைப்படம் EMIS தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

தெரிவு செய்யப்பட்டவர்களின் முழு விவரம் EMIS இணையத்தளத்தில் பதிவிட வேண்டும். உறுப்பினர்களின் பதவி மற்றும் பிரதிநிதித்துவம் குறித்துப் பள்ளிக் கல்வித் துறையின் அரசாணை நிலை எண்-42, நாள் 06.03.2019-இல் கூறியுள்ளவாறு தவறாமல் பின்பற்றி பள்ளி மேலாண்மைக் குழுக்களை மறுகட்டமைப்பு செய்யப்பட வேண்டும்.

**<u>மறுகட்டமைப்பிற்கான முன் திட்டமிடல் கூட்டம்:</u>**

**இணைப்பு 1** - ல் கொடுக்கப்பட்டுள்ள பள்ளிகளின் பட்டியலின்படி சார்ந்த துறைகளின் அலுவலர்களுடன் (கீழ்கண்டவாறு) உதவி மாவட்ட திட்ட அலுவலர் APO (SS), APO (Ele), மாவட்ட பள்ளி மேலாண்மைக் குழு ஒருங்கிணைப்பாளர் (DC-SMC) மற்றும் வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் இணைந்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் தலைமையில் **இணைப்பு 2** - ல் கொடுக்கப்பட்டுள்ள கால அட்டவணைப்படி முன் திட்டமிடல் கூட்டம் மற்றும் பயிற்சிகளை நடத்தி மறுகட்டமைப்பிற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தல் வேண்டும்.

- DC – KGBV / DC – NSCBAV
- உதவி வன பாதுகாவலர் (Assistant Conservator of Forests, Forest Department)
- திட்ட அலுவலர் (பழங்குடியினர் நலம்) (Project Officer (Tribal Welfare)) - சேலம், தருமபுரி, நாமக்கல், திருச்சி, திருவண்ணாமலை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி மாவட்டங்கள் மட்டும்/மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் (பிற மாவட்டங்கள்) (District Adi Dravidar and Tribal Welfare Officer)

ii. மறுகட்டமைப்பு நாளன்று பள்ளிக் கல்வித் துறை சார்ந்த மாவட்ட அலுவலர்கள் (CEO, DEO, BEO, APO (SS), APO (Ele), DCs, BRC Supervisors & BRTEs) பார்வையாளராக கலந்துகொண்டு தலைமையாசிரியருக்கு தக்க உதவிகளைப் புரிந்து இச்செயல்பாட்டினை சிறப்பாக நடத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

iii. மேலும், வனத் துறை மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்ந்த பள்ளிகளில், அத்துறை சார்ந்த அலுவலர்களும் பார்வையாளர்களாக கலந்துகொள்வதை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் உறுதி செய்தல் வேண்டும்.

iv. இப்பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு மறுகட்டமைப்பு சார்ந்த வழிகாட்டுதல் கூட்டத்தினை உதவி மாவட்ட திட்ட அலுவலர் APO (SS), APO (Ele) தலைமையில் மாவட்டங்களில் நடத்தப்பட வேண்டும்.

v. மறுகட்டமைப்பு முடிந்த பின் இப்பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை (ID Card) மற்றும் குழுவிற்கான தன் முகவரியிட்ட கடிதத்தாள் (Letter Pad) ஐம்பது தாட்களைக் கொண்டு அச்சடித்து வழங்கப்படுவதையும் மாவட்ட அலுவலர்கள் உறுதி செய்தல் வேண்டும்.

மேற்காண் அனைத்து வழிகாட்டுதல்களைப் பின்பற்றி சிறப்பான முறையில் பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பினை இணைப்பிலுள்ள அனைத்து பள்ளிகளில் சிறப்புடன் நடத்திட அறிவுறுத்துமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு 1: மறுகட்டமைப்பிற்கான பள்ளிகளின் பெயர்ப் பட்டியல்**

**இணைப்பு 2: முன் திட்டமிடல் பயிற்சி கால அட்டவணை**

**மாநில திட்ட இயக்குநருக்காக.**

18/7/23.

**நகல்:**

1. இயக்குநர், பழங்குடியினர் நல இயக்ககம்
2. முதன்மை தலைமை வன பாதுகாவலர் (வனத்துறை தலைவர்), வனத்துறை தலைமையகம்

## பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு 2023 – 24

பள்ளியின் பெயர்: UDISE Code:

ஒன்றியம்: மாவட்டம்:

### படிவம்– 1

### மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் விவரம்

| வ. எண் | மாணவர் பெயர் | பயிலும் வகுப்பு | பெற்றோர் பெயர் | பெற்றோர் முகவரி | பெற்றோர் கையொப்பம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

## பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு 2023 – 24

பள்ளியின் பெயர்: UDISE Code:

ஒன்றியம்: மாவட்டம்:

### படிவம்– 2

### உறுப்பினர்களுக்கான தெரிவு

| வ. எண் | விருப்பம் தெரிவித்த பெற்றோர்களின் பெயர் | முன் மொழிந்தவர் பெயர் | வழி மொழிந்தவர் பெயர் | ஆதரவு தெரிவிக்கும் பெற்றோர்களின் எண்ணிக்கை | தேர்ந்தெடுக் கப்பட்டாரா/ இல்லையா (ஆம்/இல்லை) |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

**கையொப்பம்:**

| தலைமையாசியர் | உள்ளாட்சிபிரதிநிதிகள் | ஆசிரியர் | பெற்றோர்கள் |
|---|---|---|---|
| 1, | 1, | 1, | 1, |
| | 2, | | 2. |

## பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு 2023-24

பள்ளியின் பெயர்: UDISE Code:

ஒன்றியம்: மாவட்டம்:

### படிவம்-3

### தலைவருக்கான தெரிவு

| வ. எண் | விருப்பம் தெரிவித்த உறுப்பினர்களின் பெயர் | முன் மொழிந்தவர்பெயர் | வழி மொழிந்தவர் பெயர் | ஆதரவு தெரிவிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை | தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் பெயர் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரின் பெயர்:

| வ. எண் | உறுப்பினர்களின் கையொப்பம் | வ. எண் | உறுப்பினர்களின் கையொப்பம் |
|---|---|---|---|
| 1 | | 11 | |
| 2 | | 12 | |
| 3 | | 13 | |
| 4 | | 14 | |
| 5 | | 15 | |
| 6 | | 16 | |
| 7 | | 17 | |
| 8 | | 18 | |
| 9 | | 19 | |
| 10 | | 20 | |

## துணைத்தலைவர் தெரிவு

| வ. எண் | விருப்பம் தெரிவித்த உறுப்பினர்களின் பெயர் | முன் மொழிந்தவர் பெயர் | வழி மொழிந்தவர் பெயர் | ஆதரவு தெரிவிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை | துணைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் பெயர் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

**பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட துணைத்தலைவரின் பெயர்:**

| வ. எண் | உறுப்பினர்களின் கையொப்பம் | வ. எண் | உறுப்பினர்களின் கையொப்பம் |
|---|---|---|---|
| 1 | | 11 | |
| 2 | | 12 | |
| 3 | | 13 | |
| 4 | | 14 | |
| 5 | | 15 | |
| 6 | | 16 | |
| 7 | | 17 | |
| 8 | | 18 | |
| 9 | | 19 | |
| 10 | | 20 | |

## பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு 2023-24

பள்ளியின் பெயர்: UDISE Code:

ஒன்றியம்: மாவட்டம்:

### படிவம்-5

### பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களின் விவரம்

| வ. எண் | பெயர் | பதவி | தொலைப் பேசி எண் | முகவரி | கையொப்பம் |
|---|---|---|---|---|---|
| 1 | | தலைவர் | | | |
| 2 | | துணைத்தலைவர் | | | |
| 3 | | தலைமையாசிரியர் (உறுப்பினர் மற்றும் கூட்ட அழைப்பாளர்) | | | |
| 4 | | ஆசிரியர் பிரிதிநிதி | | | |
| 5 | | பெற்றோர் பிரதிநிதி | | | |
| 6 | | பெற்றோர் பிரதிநிதி | | | |
| 7 | | பெற்றோர் பிரதிநிதி | | | |
| 8 | | பெற்றோர் பிரதிநிதி | | | |
| 9 | | பெற்றோர் பிரதிநிதி | | | |
| 10 | | பெற்றோர் பிரதிநிதி | | | |
| 11 | | பெற்றோர் பிரதிநிதி | | | |
| 12 | | பெற்றோர் பிரதிநிதி | | | |
| 13 | | பெற்றோர் பிரதிநிதி | | | |
| 14 | | பெற்றோர் பிரதிநிதி | | | |
| 15 | | பெற்றோர் பிரதிநிதி | | | |
| 16 | | பெற்றோர் பிரதிநிதி | | | |
| 17 | | உள்ளாட்சி பிரதிநிதி | | | |
| 18 | | உள்ளாட்சி பிரதிநிதி | | | |
| 19 | | கல்வி ஆர்வலர்/ அரசு சாரா அமைப்பினர் / ஓய்வு பெற்ற ஆசிரியர் | | | |
| 20 | | சுய உதவிக் குழு உறுப்பினர் (பெற்றோர்) | | | |